[3rd March 1969

ஆசிரியர்களுக்கு சீருடை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில கல்வி ஆலோசனைக் குழுவில் ஆசிரியர் சீருடை அணிவது பற்றி தீர்மானிக்கப்பட்டதா?

(இ) ஆமெனில் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Welcome arch arranged at Tallakulam

* 104 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether a welcome arch was arranged at Tallakulam, Madurai at the expense of the Public Works Department to welcome the delegates of the World Tamil Conference at Madurai on 15th January 1968 and 16th January 1968 ?

தல்லாகுளத்தில் அமைக்கப்பட்ட வரவேற்பு வளையம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு 15, 16-1-1968-ல் மதுரையில் வரவேற்பு கொடுக்க (P.W.D.) பொதுப் பணித் துறையின் செலவில் மதுரை தல்லாகுளத்தில் வரவேற்பு வளையம் போடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இல்லை.

Mettur Dam

* 105 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the height of silt formed in the Mettur Dam ; and

(b) whether there is any proposal to desilt this dam?

மேட்டூர் அணை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேட்டூர் அணையில் எத்தனை அடி மண் மேடிட்டிருக்கிறது?

(இ) இதைத் தூர் வாரும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?